சார்பு நீதிமன்றம். ராசிபுரம்.

எம்.சி.ஓ.பி.எண்.48/2023 உ/இ 49/2023

2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் நாள் மனுதாரர்/ எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய ம.சா.4 ம் வாக்கு மூலம் 1873ம் ஆண்டின் 10வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.எஸ்.பார்த்தீபன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | டாக்டர்.அருண்குமார் | த/பெ | - | கோவிந்தராஜ் |
| ஊர் | - | கோயமுத்தூர் | வட்டம் | - | கோயமுத்தூர் |
| தொழில் | - | டாக்டர் | வயது | - | 37 |

5.12.2024

முதல் விசாரணை

நான் தற்போது கோயமுத்தூர் அருண் பிசியோ ரிகேப் சென்டர் என்ற மருத்துவ மனையில் நான் முதன்மை மருத்துவராக பணியாற்றிவருகிறேன்.எனக்குநீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாலை விபத்தில் காயமுற்ற மனுதாரர் என்னிடம் பிசியோதரப்பி சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் சரிதான். அவர் என்னிடம் பிப்ரவரி 2023 முதல் அக்டோபர் 2024 வரை என்னிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டார். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள பக்கம் எண்.65 முதல் 69 பக்கம் வரை, 75 முதல் 82 பக்கம் வரை உள்ள இரசீதுகள் என்னால் வழங்கப்பட்டது தான். அந்த ரசீதுகளில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய அடையாள அட்டை சா.சா.ஆ.2 மற்றும் என்னுடைய மருத்துவ மனையின் பதிவு சான்று சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரர் பிசியோதரப்பி சிகிச்சை எடுக்கவேண்டும் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பரிந்துரை கடிதம் கொடுத்து உள்ளாரா என்றால் இல்லை. ஒரு நபருக்கு பிசியோதரப்பி சிகிச்சை வேண்டுமா என்பதை அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தான் சொல்லமுடியும் என்றால் சரிதான். மனுதாரருக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.6 ஆவணத்தில் அவருக்கு பிசியோதரப்பி சிகிச்சை அளிக்கப்பட்டது பற்றியும் பிசியோதரப்பி சிகிச்சை தேவைப்படுகிறது என்ற பரிந்துரை எதுவும் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மனுதாரருக்கு விபத்து சிகிச்சை அல்லாமல் வேறு உடல்உபாதைக்கு சிகிச்சைக்கு என்னிடம் வந்திருக்கலாம் என்றால் என்னிடம் விபத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காகவும், அதை சரி செய்வதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார். நான்

மனுதாரருக்கு ஒவ்வொரு நாள் சிகிச்சைக்கும் தனித்தனியாக இரசீது கொடுக்கவில்லை. மனுதாரருக்கு நரம்பு தொடர்பாக சிகிச்சை எதுவும் அளிக்கவில்லை என்று ம.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மனுதாரருக்கு பிசியோதரப்பி சிகிச்சை தேவையில்லை என்றும் மனுவிற்காக என்னிடம் இரசீதுகள் வாங்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் மனுதாரர் முதல் முறையாக பிப்ரவரி 2023ல் சிகிச்சைக்கு வந்தார். இரசதுகளை நான் மிகைப்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/-Dr.G.Arunkumar

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.